Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.167**/2019**

Deposition of PW2 Witness for Defence

Defence Court

Name :Periyasamy Caste:

Father's Name :Kathiresan Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 09th December 2021.

**முதல் விசாரணை-**

நான் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுக்கா சண்முகநாதபுரம் அஞ்சல் ஆரவாயல் கிராமத்தில் வசிக்கிறேன். நானும் இறந்து போன விவேக்கும் டி.எல்.எப். டாஸ்மார்க் பாரில் ஒன்றாக வேலை செய்தோம். எங்களுடன் வெற்றிசெல்வன், கோகுல், அஜித், ராஜு, சரவணன் மற்றும் எதிரி அஜித்குமார் ஆகியோர் வேலை செய்தனர். 29/05/2019 இரவு விவேக்கிற்கும் அஜித்குமாருக்கும் பிறந்த நாள் கொண்டாடினார்கள். அன்று இரவு 12.00 மணிக்கு மேல் கேக் வெட்டிவிட்டு எல்லோரும் சரக்கு அடித்தார்கள். பேசிக்கொண்டிருக்கும் போது விவேக்கிற்கும் அஜித்குமாருக்கும் சண்டை வந்துவிட்டது. அப்போது விவேக் அஜித்குமாரின் அம்மாவை பற்றி தவறாக பேசிவிட்டார். அதனால் கோவம் வந்து அஜித்குமார் கடாயை எடுத்து எறிந்தார். அந்த கடாய் விவேக்கின் தலையில் பட்டது. அப்போது நானும் அங்கு இருந்தேன். விவேக்கின் தலையில் இரத்தம் வந்துவிட்டது. அதனால் நானும், கோகுல், ஹரிஹரன் ஆகியோரும் சேர்ந்து விவேக்கை ராமசந்திரா

மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். விவேக்கிற்கு தையல் போட்டு சிகிச்சை அளித்தார்கள். காலை 7.00 மணிக்கு டிஸ்சார்ஜ் ஆகி விவேக்கை அழைத்து வந்துவிட்டோம். பின்னர் நாங்கள் சாதாரணமாக வேலை பார்க்க ஆரம்பித்துவிட்டோம். எங்கள் கடையின் உரிமையாளர் விவேக்கின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தார். அதன் பின்னர் விவேக்கின் உறவினரான ரமேஷ் என்பவர் வந்தார். அவருடன் விவேக் பேசிக்கொண்டிருந்தார். மறுபடியும் ராமசந்திரா மருத்துவமனைக்கு விவேக்கை நானும், கோகுல் மற்றும் ரமேஷ் அழைத்து சென்றோம். விவேக்கின் உடல் நிலை சரியில்லாமல் இருந்ததால் மீண்டும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ராமசந்திரா மருத்துவமனையில் முடியாது என்று சொன்னதால் அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ராமசந்திரா மருத்துவமனையில் பணம் அதிகமாக கேட்டதால் எங்களால் பணம் கட்டமுடியாமல் அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள். காலை 6.00 மணி வரை இருந்துவிட்டு நான் வந்துவிட்டேன். இது சம்பந்தமாக ரமேஷ் புகார் கொடுத்தார். பின்னர் போலீசார் கடைக்கு வந்து விசாரித்தார்கள். பின்னர் மூன்றாம் தேதி விவேக் இறந்து விட்டார். போலீசார் எங்களை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

29/05/2019 அன்று இரவு சுமார் 15 அல்லது 16 நபர்கள் அந்த அறையில் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். அந்த அறையில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த அறை நாங்கள் தங்குவதற்காக பார் ஓனர் கொடுத்தது என்றால் சரிதான். கேக் வெட்டுவதற்கு முன்னர் நாங்கள் எல்லோரும் குடித்திருந்ததாக சொன்னால் சரியல்ல. கேக் வெட்டிய பின்பு தான் குடித்தோம். போலீசார் ஒன்றாம் தேதி என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் வாக்குமூலத்தில் கையெழுத்து போடவில்லை. எதிரி அஜித்குமார் கடாயை எடுத்து விவேக்கின் மீது எறிந்ததை நான் பார்த்தேன். எங்கள்

அறையில் இருந்த நபர்கள் எல்லாரையும் சாட்சிகளாக சேர்த்திருக்கிறார்கள். ராமசந்திரா மருத்துவமனையில் ஒன்றும் பிரச்சனையில்லை என்று கூறி டிஸ்சார்ஜ் செய்தார்கள். டிஸ்சார்ஜ் செய்து வந்த பின்பு நாங்கள் வேலை செய்த இடத்தில் அடுத்த ஓரத்தில் விவேக் படுத்திருந்தார். ராமசந்திரா மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வந்த பின்பு விவேக் மீண்டும் மது அருந்தினார் என்றால் சரிதான். இந்த விவரங்களை போலீசாரிடம் தெரிவித்தேன். போலீசார் எழுதிய என்னுடைய வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை. முதலில் ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்தது சம்பந்தப்பட்ட ஆவணங்களை மருத்துவமனையினர் எங்களிடம் கொடுக்கவில்லை. 29/05/2019 இரவு 30/05/2019 அதிகாலை 12.30 மணிக்கு விவேக்கை ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். 30/05/2019 அன்று இரவு 9.00 மணிக்கு மீண்டும் ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவமனையில் வரவேற்பு அரையில் காத்திருந்தோம். மருத்துவர் வந்து பார்த்தார். பணம் ரூ.50,000 கட்ட சொன்னார்கள். எங்களிடம் பணம் இல்லை. இந்த விவரத்தை உரிமையாளருக்கு தெரிவிக்கவில்லை. 31/05/2019 அதிகாலை 2.00 மணிக்கு அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அரசு பொது மருத்துவமனையில் இருந்த மருத்துவர்களிடம் விவேக்கிற்கு ஏற்கெனவே ராமசந்திரா மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது பற்றி கூறினோம். ராமசந்திரா மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்த அன்றே உரிமையாளருக்கு தகவல் தெரிவித்தோம். அவர் காலையில் வந்து விவேக்கை பார்த்தார். விவேக்கிற்கு அடிப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே குளியல் அறையில் இரத்த வாந்தி எடுத்தார். அதற்காக சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை. அதிகமாக குடிப்பதால் தான் இரத்த வாந்தி வருவதாகவும் அதனால் குடிப்பதை நிறுத்துமாறும் விவேக்கிடம் கூறினேன். ஆனால் விவேக் நான் சொன்னதை கண்டுகொள்ளவில்லை. சாட்சி ரமேஷ் வந்த பின்பு விவேக்கும் அவரும் சேர்ந்து குடித்தார்கள். விவேக்கிற்கு

மயக்கம் வந்துவிட்டதாக யார் எனக்கு தகவல் சொன்னார்கள் என்று தெரியவில்லை. விவேக்கின் உறவினர்களுக்கு உரிமையாளர் தான் தகவல் தெரிவித்தார். போரூர் ராமசந்திரா மருத்துவமனையிலிருந்து அரசு பொது மருத்துவமனைக்கு செல்ல ஒரு மணி நேரம் தான் ஆகும் என்றால் சரிதான். இரவு 9.00 மணிக்கு ராமசந்திரா மருத்துவமனைக்கு சென்று சுமார் ஐந்து மணி நேரம் அங்கேயே இருந்தோம். அப்போது விவேக் என்னிடம் பேசினார். வரவேற்பு அறையில் தான் உட்கார்ந்திருந்தோம். பாரில் வேலை பார்த்த நபர்கள்குள் ஏற்கெனவே கோஷ்டி மோதல் இருந்தது என்றால் சரியல்ல. அந்த காழ்புணர்ச்சி காரணமாக எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 29/05/2019 அன்று நள்ளிரவில் ராமசந்திரா மருத்துவமனைக்கு எதிரி அஜித்குமாரும் உடன் சென்று தான் விவேக்கை சிகிச்சைக்கு சேர்த்தார் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

முதல் முறையாக விவேக்கை ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது சாதாரண காயம் என்று கூறி தையல் மட்டும் போட்டு அனுப்பி விட்டார்கள். உள் நோயாளியாக அனுமதித்து பரிசோதனைகள் மற்றும் ஸ்கேன் ஆகியவை எடுக்கவில்லை

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ராமசந்திரா மருத்துவமனைக்கு அழைத்து சென்று திரும்ப அழைத்து வரும்போது விவேக் சாதாரணமாகத்தான் இருந்தார். அதற்கு பின்னர் விவேக் தனக்கு தலைவலி மற்றும் உபாதைகள் இருப்பதாக எதுவும் கூறவில்லை.